வாங்கிப் படிக்கிறேன். நல்லது கெட்டது இரண்டையும் தான் படிக்கிறேன். (குறுக்கீடு) விலை கொடுத்துத்தான் வாங்குகிறேன். வெளியிலே நடப்பவைகளை எவ்வளவு வேண்டுமானாலும் விமரிசனம் செய்து கொள்ளட்டும். ஆனால், அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் சட்டசபையிலே பேசியதற்கு பாதுகாப்பு இல்லாவிட்டால், அவர்களுடைய உரிமை பாதிக்கப்படும். சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி எது வேண்டுமானாலும் எழுதலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. ஆகவே, இந்தப் பத்திரிகையில் எழுதியிருப்பவற்றில் உரிமைப் பிரச்சினை இருக்கிறது. இதை உரிமைக் குழுவிற்குக் கொண்டுபோக, இந்தச் சபை இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "கடிதம்" என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கின்ற வாக்கியங்கள் தெளிவாக இந்த மன்றத்தை அவமதிக்கின்ற முறையிலே எழுதப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், அவை முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த வாக்கியங்கள் இந்த மன்றத்தை அவமதிக்கின்ற முறையில் இருப்பதாக எடுத்துக்காட்டியிருப்பதாலும் "உரிமை மீறல்" இருக்கிறதென்று தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு செ பா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, "கடிதம்" என்ற நாளிதழ்மீது கொண்டுவந்திருக்கும் உரிமைப் பிரச்சினையை, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று பிரேரேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"'கடிதம்' என்ற நாளிதழ்மீது எழுப்பப்பட்டிருக்கும் உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

எமனேஸ்வரம் கைத்தறி நெசவாளர்களுடைய கூலி குறைப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் இந்தப் பேரவைக்கு கீழ்க்கண்ட ஓர் அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள் :—

" சட்டப் பேரவை 42-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் எமனேஸ்வரம் கைநெசவு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த கூலியை திடீரென்று மாஸ்டர் வீவர்கள் குறைத்துவிட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி விவாதிக்க சபையின் இன்றைய அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்."

இந்தத் தீர்மானம் அரசின் அன்றாட நிர்வாக காரியங்களுக்கு உட்பட்ட காரியமாக இருக்கிறபடியால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்தபடியாக, இதே பொருள் குறித்து ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

5. கவன ஈர்ப்பு.

உடன்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்காமையினால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்.